10 வது தமிழ் புத்தகம் வினா - விடை அடிப்படையில் தயாரிக்கப்பட்டது :

1) 'மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன் விரையார் கழற்கென்' - எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்? = மாணிக்கவாசகர்

2) மாணிக்கவாசகர் பிறந்த ஊர் எது? = திருவாதவூர் - மதுரை

3) மாணிக்கவாசகர் யாரால் ஆட்கொள்ளப்பட்டார்? = திருப்பெருந்துறை இறைவனால்

4) திருப்பெருந்துறை கோவில் அமைந்துள்ள மாவட்டம் எது? = புதுக்கோட்டை

5) 'அழுது அடியடைந்த அன்பர்' - என்று அழைக்கப்பட்டவர் யார்? = மாணிக்கவாசகர்

6) மாணிக்கவாசகர் எழுதிய நூல்கள் எது? = திருவாசகம், திருக்கோவையார்

7) மாணிக்கவாசகர் எழுதிய திருவாசக நூல் எத்தனை பாடல்களை கொண்டது? = 658 பாடல்கள்

8) திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தவர் யார்? = ஜி.யூ.போப்

9) எந்த ஆண்டு ஜி.யூ.போப் அவர்கள் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்? = 1900

10) திருவாசகத்தை சிறப்பிக்க கூறப்படும் தொடர் எது? = 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'

11) சதகம் என்பது எத்தனை பாடல்களைக் கொண்ட நூல் அமைப்பாகும்? = 100 பாடல்கள்

12) மாணிக்கவாசகர் எங்கு சிவன் கோவிலை எழுப்பினார்? = திருப்பெருந்துறையில்

13) மாணிக்கவாசகரின் காலம் யாது? = 9 ஆம் நூற்றாண்டு

14) மாணிக்கவாசகர் யாரிடம் தலைமை அமைச்சராக பணியாற்றினார்? = அரிமர்த்தன பாண்டிய மன்னனிடம்

15) 'உலக வரலாற்றில் மேதையான மாணிக்கவாசகரை விட புலமை, உழைப்பு, துன்பத்தை பொறுத்தல், இடையறா நிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனதை கவர்கின்றவர் யாரும் இல்லை' - என்று கூறியவர் யார்? = ஜி.யூ.போப்

16) சமண சமயத்திற்கே உரிய அறக்கருத்து எது? = கொல்லாமை

17) 'இல்லாததில்லை இணையில்லை முப்பாலுக்கிந் நிலத்தே' - என்று திருக்குறளை பாராட்டியவர் யார்? = பாரதிதாசன்

18) திருக்குறள் முதன் முதலில் பதிப்பித்த ஆண்டு எது? = கி.பி.1812

19) திருக்குறள் முதன் முதலில் எங்கு பதிப்பிக்கப்பட்டது? = தஞ்சை

20) 'பிறப்பொக்கும் எல்லா உயிரிக்கும்' - என்னும் பொது நெறி காட்டியவர் யார்? = திருவள்ளுவர்

21) தமிழக அரசு எந்த நாளை திருவள்ளுவர் நாளாக அறிவித்து கொண்டாடி வருகிறது? = தைத்திங்கள் 2 ஆம் நாள்

22) திருக்குறளை முதன் முதலில் பதிப்பித்தவர் யார்? = மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம்

23) 'வணங்கி வழியொழுகி மாண்டார் சொல் கொண்டு' - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = ஏலாதி

24) ஏலாதி நூலின் ஆசிரியர் பெயர் யாது? = கணிதமேதாவியார்

25) கணிதமேதாவியார் அவர்கள் எந்த சமயத்தை சார்ந்தவர்? = சமண சமயம்

26) கணிதமேதாவியார் வாழ்ந்த காலம் யாது? = கி.பி.5 ஆம் நூற்றாண்டு

27) கணிதமேதாவியார் இயற்றிய வேறு நூல் யாது? = திணைமாலை நூற்றைம்பது

28) ஏலாதி என்ற நூலில் இடம்பெற்றுள்ள 6 மருந்து பொருட்கள் எவையவை? = சுக்கு, மிளகு, திப்பிலி, சிறுநாவற்பூ, இலவங்கம், ஏலம் ஆகியவை

29) ஏலாதி நூலின் நூல் அமைப்பு அமைப்பு யாது? = சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உள்பட 81 வெண்பாக்களை கொண்டது

30) 'வீறுநடை செம்மொழி தமிழ்மொழி உலகம் வேரூன்றிய நாள் முதல் உயிர் மொழி' - என்று செம்மொழியை பற்றி கூறியவர் யார்? = பாவலேறு பெருஞ்சித்தரனார்

31) திருந்திய பண்பும், சீர்திருத்த நாகரிகம் பொருந்திய தூய்மொழி தமிழ்மொழி செம்மொழியாம் - என்று செம்மொழிக்கு இலக்கணம் வகுத்தவர் யார்? = பரிதிமாற்கலைஞர்

32) பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி; அதுவே நம்மொழி; - என்று கூறியவர் யார்? = பாவாணர்

33) பாவாணர் கூறிய பதினாறு செவ்வியல் தன்மைகள் எவை? = தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை ஆகியவை

34) பதினொறு தகுதி கோட்பாடுகளை வரையறுத்தவர் யார்? = முஸ்தபா

35) முஸ்தபா அவர்கள் வரையறுத்த பதினொறு தகுதி கோட்பாடுகள் எவை? = தொன்மை, பிறமொழித் தாக்கமின்னை, தாய்மை, தனித்தன்மை, இலக்கிய வளமும் இலக்கியச் சிறப்பும், பொதுமைப் பண்பு, நடுவுநிலைமை, பண்பாடு கலை பட்டறிவு வெளிப்பாடு, உயர்சிந்தனை, கலை இலக்கியத் தனித்தன்மை வெளிபாடு, மொழிக் கோட்பாடு

36) தமிழ் இலக்கணம் படிக்கப்படிக்க விருப்பத்தை உண்டாக்குவது - என்று கூறியவர் யார்? = கெல்லட்

37) மதுரை தமிழ்ச்சங்கத்தால் வெளியிடப்படும் இதழ் எது? = செந்தமிழ்

38) 'உயர்தனிச் செம்மொழி' - என்னும் நூலை எழுதி வெளியிட்டவர் யார்? = தேவநேயப்பாவாணர்

39) தேவநேயப்பாவாணர் எழுதிய உயர்தனிச் செம்மொழி எனும் நூல் எந்த மொழியைச் சார்ந்த நூலாகும்? = ஆங்கில நூல்

40) 'என்றுமுள தென்தமிழ்' - என்று கூறியவர் யார்? = கம்பர்

41) மிகுதியான வேர்ச்சொல்களைக் கொண்ட மொழி எது? = தமிழ்

42) தமிழ் மொழி எந்த மொழிகளுக்கு தாய்மொழியாக விளங்குகிறது? = திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் முதலிய மொழிகளுக்கு

43) தமிழ் மொழி பிராகுயி முதலான வடபுல மொழிகளுக்கும் தாய்மொழியாக விளங்குகிறது என்று கூறியவர் யார்? = கால்டுவெல்

44) 1090 மொழிகளுக்கு வேர்ச்சொல்லையும், 109 மொழிகளுக்கு உறவுப்பெயர்களையும் தந்துள்ள மொழி எது? = தமிழ்

45) சங்க இலக்கியங்களின் அடிகள் மொத்தம் எத்தனை? = 26,350

46) இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைத் கொண்ட மொழி எது? = தமிழ்

47) மாந்தர் இனத்திற்கே வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்துள்ள தமிழ் நூல் எது? = திருக்குறள்

48) சங்க இலக்கியம் போன்று விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை - என்று கூறியவர் யார்? = கபில்சுவலபில்

49) கபில்சுவலபில் எந்த நாட்டைச் சேர்ந்த அறிஞர் ஆவார்? = செகுடியரசு நாடு

50) தமிழே மிகவும் பண்பட்டமொழி, எது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி என்று பாராட்டியவர் யார்? = மாக்சுமுல்லர்

51) இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது - என்று கூறியவர் யார்? = முனைவர் எமினோ

52) சங்க இலக்கியம் ஏன் மக்கள் இலக்கியம் - என அழைக்கப்படுகிறது? = மக்கள் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்துவதால்

53) தமிம் மொழி எத்தனை ஒலிகளைக் கொண்டுள்ளது? = 500 ஒலிகள்

54) சிறப்புமிக்க தமிழைச் "செம்மொழி" என அறிவித்தல் வேண்டும் என்ற முயற்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது? = 1901 முதல் - 2004 வரை

55) நடுவணரசு எந்த ஆண்டு தமிழை செம்மொழியாக அறிவித்தது? = 2004 - அக்டோபர்

56) செம்மொழிக் காலக்கேடுகள் பற்றிக் கூறுக :

| | |
|---|---|
| 1901 ஆம் ஆண்டு | மதுரைத் தமிழ்ச்சங்க இதழான செந்தமிழ் பரிதிமாற் கலைஞரின் உயர்தனிச் செம்மொழி என்னும் கட்டுரை வெளியிடப்பட்டது |
| 1918 ஆம் ஆண்டு | மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை, தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டித் தீர்மானம் நிறைவேற்றி, அதை இந்திய அரசுக்கும் இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பி வற்புறுத்தியது |
| 1918 ஆம் ஆண்டு | சைவ சித்தாந்த மாநாட்டில் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது |
| 1919 ஆம் ஆண்டு | கரந்தைத் தமிழ்ச்சங்கம் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியது |
| 1966 ஆம் ஆண்டு | உயர்தனிச் செம்மொழி என்னும் ஆங்கில நூல் தேவநேயப்பாவாணரால் எழுதி வெளியிடப்பட்டது |
| 2004 ஆம் ஆண்டு | நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்தது |

57) ரூபாவதி, கலாவதி - நாடகங்களில் பெண் வேடங்களை ஏற்று நடித்த கலைஞர் யார்? = பரிதிமாற்கலைஞர்

58) பரிதிமாற்கலைஞர் பிறந்த ஆண்டு எது? = 1870 ஜீலை 6

59) சித்திரக்கவி என்ற நூலை எழுதியவர் யார்? = பரிதிமாற்கலைஞர்

60) பரிதிமாற்கலைஞர் இளங்கலைப் பட்டம் பெற்ற கல்லூரி எது? = சென்னை கிறிஸ்துவ கல்லூரி (B.A)

61) சென்னை கிறிஸ்துவ கல்லூரியில் பரிதிமாற்கலைஞர் இளங்கலைப் பட்டம் பெற்ற போது அந்தக் கல்லூரியின் முதல்வராக இருந்தவர் யார்? = வில்லியம் மில்லர்

62) வில்லியம் மில்லர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? = ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்

63) படகின் துடுப்பு அன்னப்பறவைக்கு உவமையாக கூறப்பட்ட நூல் எது? = ஆர்தரின் இறுதி

64) ஆர்தரின் இறுதி என்ற நூலை எழுதியவர் யார்? = டென்னிசன்

65) டென்னிசன் கூறிய உவமைக்கு இணையான உவமை எந்த தமிழ் நூலில் உள்ளது என்று பரிதிமாற்கலைஞர் கூறினார்? = கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்- குகப்படலம் - 'விடுநனி கடிது' எனும் பாடல்

66) குமரகுருபர் எழுதிய நீதிநெறி விளக்கம் என்ற நூலுக்கு உரை எழுதியவர் யார்? = பரிதிமாற்கலைஞர்

67) நீதிநெறி விளக்க நூலில் எத்தனை பாடல்களுக்கு பரிதிமாற்கலைஞர் அவர்கள் விளக்க உரை எழுதியுள்ளார்? = 51 பாடல்களுக்கு

68) பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் மொழி பெயர்தல் வேண்டும் - என்று கூறியவர் யார்? = பாரதியார்

69) பரிதிமாற்கலைஞர் யாரிடம் தமிழ்க் கல்வியைப் பயின்றார்? = மகாவித்துவான் சபாபதியார்

70) பரிதிமாற்கலைஞர் யாரிடம் வடமொழிக் கல்வியைப் பயின்றார்? = தன் தந்தை கோவிந்த சிவனாரிடம்

71) பரிதிமாற்கலைஞர் தன்னிடம் தமிழ் பயிலும் மாணவர்களை எவ்வாறு அழைத்தார்? = இயற்றமிழ் மாணவர்

72) மதுரையில் எத்தனையாவது தமிழ்ச் சங்கம் நிறுவ பரிதிமாற்கலைஞர் உதவி புரிந்தார்? = நாங்காம் தமிழ்ச் சங்கம்

73) மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவ முயன்றவர்களில் தலைமை பதவி வகித்தவர் யார்? = பாஸ்கரசேதுபதி

74) மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவ மேற்பார்வை செய்த அறிஞர் யார்? = பாண்டித்துரை தேவர்

75) மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவ துணைநின்ற பேராசிரியர்கள் யார்? = பரிதிமாற்கலைஞர், உ.வே.சா, இராகவனார்

76) பரிதிமாற்கலைஞருக்கு 'திராவிடசாஸ்திரி' என்ற பட்டத்தை வழங்கியவர் யார்? = யாழ்ப்பாணம் சி.வை.தாமோதரனார்

77) சி.வை.தாமோதரனார் எதற்காக பரிதிமாற்கலைஞருக்கு 'திராவிடசாஸ்திரி' என்ற பட்டத்தை வழங்கினார்? = தமிழ்ப் புலமையும், கவிபாடும் திறனையும் கண்டு

78) தனிப்பாசுரத்தொகை என்ற நூலை இயற்றியவர் யார்? = பரிதிமாற்கலைஞர்

79) தனிப்பாசுரத்தொகை என்ற நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்? = ஜி.யூ.போப்

80) பரிதிமாற்கலைஞர் எந்த நூலின் போது பெற்றோர் தனக்கு இட்ட சூரியநாராயண சாஸ்திரி என்ற வடமொழி பெயரை பரிதிமாற்கலைஞர் எனும் தனித்தமிழ் பெயராக மாற்றிக் கொண்டார்? = தனிப்பாசுரத்தொகை

81) ஞானபோதினி என்ற இதழை முதலில் தொடங்கியவர் யார்? = மு.சி.பூர்ணலிங்கம்

82) மு.சி.பூர்ணலிங்கம் பிறகு ஞானபோதினி என்ற இதழை தொடர்ந்து நடத்தியவர் யார்? = பரிதிமாற்கலைஞர்

83) பரிதிமாற்கலைஞர் ஞானபோதினியிலும், விவேகசிந்தாமணியிலும் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட்ட நூலின் பெயர் யாது? = தமிழ் வியாசங்கள்

84) வடமொழியும் தமிழ்மொழியும் கலந்து எழுதுதல் என்பது, தமிழ்மணியோடு பவளத்தைப்போலச் செந்நிறம் உடையதான மிளகாய்ப் பலம் கலந்தது போன்ற பயனையே தந்தது என்பது யாருடைய கருத்து ஆகும்? = பரிதிமாற்கலைஞர்

85) தமிழ்மொழி "உயர்தனிச் செம்மொழி" என முதன்முதலாக நிலைநாட்டியவர் யார்? = பரிதிமாற்கலைஞர்

86) பரிதிமாற்கலைஞர் இறந்த ஆண்டு எது? = 2.11.1903 - 33 வது அகவை

87) பரிதிமாற்கலைஞர் செய்த சொல்லாக்கங்கள் சிலவற்றைக் கூறுக :

1) Aesthetic - இயற்கை வனப்பு
2) Biology - உயிர்நூல்
3) Classical Language - உயர்தனிச் செம்மொழி
4) Green Rooms - பாசறை
5) Order of Nature - இயற்கை ஒழுங்கு
6) Instinct - இயற்கை அறிவு
7) Snacks - சிற்றுரை

88) ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுள் தலையாயப் பற்று மொழிப்பற்றே - என்று கூறியவர் யார்? = தந்தை பெரியார்

89) சொல்லுக்கு முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும் ஐகாரம் தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் குறுக்கம் எவ்வாறு அழைக்கப்படும்? = ஐகாரக் குறுக்கம்

90) சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் குறுக்கம் எது? = ஔகாரக்குறுக்கம்

91) ஔகாரக்குறுக்கத்தின் மாத்திரை அளவு யாது? = 1 ½ மாத்திரை

92) "ம்" என்னும் மெய்யெழுத்து, செய்யுளில் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து, கால் மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும் குறுக்கம் எது? = மகரக்குறுக்கம்

93) நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து லகர, ளகரங்கள் வருமொழியிலுள்ள தகரத்தோடு (த்) சேரும்போது ஆய்தமாகத் திரியும். இவ்வாறு திரிந்த ஆய்தம் தன்

94) அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவாக ஒலிக்கும். இதுவே ஆய்தக்குறுக்கம் எனப்படும்.

95) இசை நாடக அடிப்படையில் அமைந்த முதல் காப்பியம் எது? = சிலப்பதிகாரம்

96) சிலப்பதிகார காப்பியத்தின் நூல் அமைப்பு யாது? = 3 காண்டம் + 30 காதைகள் + 5001 பாடல்கள் கொண்டது

97) சிலப்பதிகாரத்தின் 3 காண்டம் மற்றும் அவை பெற்றுள்ள காதைகளையும் கூறுக? = 1. புகார் காண்டம் (10 காதைகள்); 2. மதுரைக் காண்டம் (13 காதைகள்); 3. வஞ்சிக் காண்டம் (7 காதைகள்)

98) சிலப்பதிகாரத்திற்கு வழங்கப்படும் சிறப்பு பெயர் யாது? = ‘உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்’

99) இளங்கோவடிகளின் தந்தை மற்றும் தாய் பெயர் யாது? = இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மற்றும் தாய் நற்சோணை

100) இளங்கோவடிகளின் தமையன் பெயர் யாது? = சேரன் செங்குட்டுவன்

101) இளங்கோவடிகள் இளமையிலேயே துறவறம் பூண்டு தங்கியிருந்த இடம் எது? = குணவாயிற் கோட்டம்

102) சிலப்பதிகார நூல் உணர்த்தும் மூன்று உண்மைகள் யாது?

1) அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்
2) உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
3) ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்

103) சிலப்பதிகாரத்தில் பல்வகை மணிகளையும், அதன் தன்மைகளையும் விளக்கும் காதை எது? = ஊர்காண் காதை

104) பாண்டிய மன்னனின் துறைமுகம் எது? = கொற்கை

105) காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாசாத்துவானின் மகன் யார்? = கோவலன்

106) காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாநாய்கனின் மகள் யார்? = கண்ணகி

107) மாதவி, இந்திரவிழாவில் எந்த வரிப் பாடல்களை பாடினாள்? = கானல்வரிப் பாடல்களை

108) வாணிகம் செய்தற்பொருட்டுக் கண்ணகியுடன் கோவலன் சென்ற இடம் எது? = மதுரை

109) கோவலனுக்கும் கண்ணகிக்கும் மதுரை வரை வழித்துணையாக வந்தவர் யார்? = கவுந்தியடிகள்

110) கவுந்தியடிகள் எந்த சமயத்தை சார்ந்த துறவி? = சமண சமயத் துறவி

111) மதுரை நகர்ப்புறத்தில் கோவலனையும் கண்ணகியையும் யாரிடம் கவுந்தியடிகள் அடைக்கலப்படுத்தினார்? = மாதிரி என்னும் இடைக்குல மூதாட்டியிடம்

112) வழக்குரை காதை சிலப்பதிகாரத்தின் எந்த காண்டத்தில் அமைந்துள்ளது? = மதுரைக் காண்டம்

113) மதுரைக் காண்டத்தில் வழக்குரை காதை எத்தனையாவது காதையாக திகழ்கிறது? = 10 வது காதை

114) காலத்தாலும், கதைத்தொடர்பாலும் பாவகையாலும் ஒன்றுபட்ட இரட்டைக் காப்பியங்கள் எது? = சிலப்பதிகாரம், மணிமேகலை

115) 'பிடர்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி' - என்ற வரியில் கூறப்படும் பெண் யார்? = கொற்றவை

116) அறுவர்க்கிளைய நங்கை - என்ற வரியில் கூறப்படும் பெண் யார்? = பிடாரி

117) ஆடல் கொண்டருளிய அணங்கு - என்ற வரியில் கூறப்படும் பெண் யார்? = பத்ரகாளி

118) தாருகன் பேருரங்கிழித்த பெண் - என்ற வரியில் கூறப்படும் பெண் யார்? = துர்க்கை

119) பசுவின் துயர்நீக்க ஒப்பற்ற மகனை தேர்ச்சக்கரத்திலிட்டுக் கொன்ற மன்னன் யார்? = மனுநீதி சோழன்

120) கண்ணகியின் காற்சிலம்பு எத்தகைய பரல்களால் ஆனது? = மாணிக்கப்பரல்கள்

121) அரசியின் காற்சிலம்பு எத்தகைய பரல்களால் ஆனது? = முத்துப்பரல்களால்

122) முதற் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம் - என்று பாராட்டப்பட்ட நூல் எது? = சிலப்பதிகாரம்

123) "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" என்று சிலப்பதிகாரத்தை போற்றிய புலவர் யார்? = பாரதியார்

124) 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' - என்று கூறியவர் யார்? = பாரதியார்

125) 'தொண்டு செய்து பழுத்த பழம் தூயதாடி மார்பில் விழும்' - என பெரியாரை போற்றியவர் யார்? = பாரதிதாசன்

126) சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்த விளையாட்டு என குழந்தை மணத்தை பற்றி கூறியவர் யார்? = பெரியார்

127) பெண்களின் சமூக விடுதலைக்காக போராடியவர் யார்? = பெரியார்

128) நாட்டிலுள்ள கேடுகளில் பெருங்கேடு பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை இவ்விழிநிலை ஒழிக்கப்பட வேண்டும் - எனக் கூறியவர் யார்? = பெரியார்

129) நம் சமுதாயத்தில் தலைகீழான புரட்சி எப்பொழுது ஏற்படும் என்று பெரியார் கூறுகிறார்? = அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போது

130) தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் எதுவென்று பெரியார் கூறுகிறார்? = மணக்கொடை

131) பெண்களே சமூகத்தின் கண்கள் எனக் கருதியவர் யார்? = பெரியார்

132) பெரியாரின் பெண்விடுதலை சிந்தனைகள் இரண்டு எது? = அடிப்படை தேவை மற்றும் அகற்றப்பட வேண்டியவை

133) பெரியார் எவற்றை பெண்களின் அடிப்படை தேவை என்று கூறுகிறார்? = பெண் கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி

134) பெரியார் எவற்றை பெண்களின் அகற்றப்பட வேண்டியவை என்று கூறுகிறார்? = மணக்கொடை, குழந்தைதிருமணம், கைம்மை வாழ்வு

135) 'தாமே பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளர வேண்டும்' - என்று கூறியவர் யார்? = பெரியார்

136) பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது என்று கூறியவர் யார்? = பெரியார்

137) பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை ஒழிக்கப்பட் வேண்டும் என்று கூறியவர் யார்? = பெரியார்

138) ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்கவேண்டும். அவர்களுக்கு உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்க வேண்டும் என்று கூறியவர் யார்? = பாரதியார்

139) பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் யார்? = பெரியார்

140) ஆணுக்குப் பெண் இளைப்பில்லை - என்று சிந்தித்தவர் யார்? = பெரியார்

141) பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல், மனிதசமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக விளங்கவேண்டும் என்று வலியுறுத்தியவர் யார்? = பெரியார்

142) சடங்குகளையும் மூடநம்பிக்கைகளையும் களைவதில் உறுதியான உள்ளம் படைத்தவராக இருந்தவர் யார்? = பெரியார்

143) 'மெல்ல மெல்ல மற' - என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்? = இலட்சுமி

144) தமிழுக்கு கதி - என்று கூறப்படும் இரு நூல்கள் எது? = கம்பராமாயணம், திருக்குறள்

145) க ம்பராமாயணம், திருக்குறள் ஆகிய இரு நூல்களும் தமிழுக்கு கதி என்று கூறப்படும் நூல்கள் - என்ற வரியைக் கூறியவர் யார்? = செல்வக்கேசவராய முதலியார்

146) உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்துவிட்டாலும் திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தால் போதும் மீண்டும் அதனைப் புதுப்பித்துவிடலாம் - எனக் கூறியவர் யார்? = டாக்டர் கால்டுவெல்

147) குகன் வாழும் நகரம் எது? = கங்கைக்கரையிலுள்ள சிருங்கிபேரம்

148) 'உள்ளம் தூயவன் தாயின் நல்லவன்' - இந்த வரிக்கு பாராட்டுப் பெற்றவன் யார்? = குகன்

149) குகனை 'உள்ளம் தூயவன் தாயின் நல்லவன்' - என்று பாராட்டியவர் யார்? = இலக்குவன்

150) கம்பராமாயணத்தில் அயோத்திய காண்டம் எத்தனையாவது காண்டமாக திகழ்கிறது? = இரண்டாவது காண்டம்

151) அயோத்தியா காண்டத்தில் இடம்பெற்றுள்ள படலங்கள் மொத்தம் எத்தனை? = 13 படலங்கள்

152) அயோத்தியா காண்டத்தில் குகப்படலம் எத்தனையாவது படலமாக அமைந்துள்ளது? = 7 வது படலமாக

153) குகப்படலத்தின் வேறு பெயர் யாது? = கங்கைப்படலம்

154) இராமன் வைத்திருந்த வில்லின் பெயர் யாது? = கோதண்டம்

155) தொல்காபிய நெறி நின்ற புலவர் யார்? = கம்பர்

156) கம்பரை ஆதரித்த வள்ளல் யார்? = திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல்

157) எத்தனை பாடல்களுக்கு ஒரு பாடல் சடையப்ப வள்ளலை பாராட்டி கம்பர் இயற்றியுள்ளார்? = 1000 பாடல்களுக்கு ஒரு பாடல்

158) கம்பர் காலத்து புலவர்கள் யார்? = செயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி

159) யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் - என்று கம்பரை புகழ்ந்த புலவர் யார்? = பாரதியார்

160) 'வடசொல் கிளவி வடஎழுத் தொரீஇ' - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = தொல்காப்பியம்

161) அம்பேத்கரின் அறிய முயற்சியால் உருவான கல்வி நிலையம் எது? = சித்தார்த்த கல்வி நிலையம்

162) அம்பேத்கர் அவர்கள் சித்தார்த்த கல்வி நிலையத்தை எங்கு தொடங்கினார்? = மும்பை

163) 'இந்தியாவின் தேசீய பங்குவீதம்' - என்ற நூலினை எழுதியவர் யார்? = அம்பேத்கர்

164) இந்தியாவின் தேசியப் பங்குவீதம் - என்னும் நூல் எந்த துறையைச் சார்ந்த நூலாகும்? = பொருளாதாரத் துறையைச் சார்ந்த நூல்

165) 'சாதி களையப்பட வேண்டிய களை' - என்று கூறியவர் யார்? = அம்பேத்கர்

166) அம்பேத்கருக்கு எந்த ஆண்டு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது? = 1990

167) அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர், பகுத்தறிவுச் செம்மல் எனப் பாராட்டியவர் யார்? = தந்தை பெரியார்

168) அம்பேத்கர் பிறந்த ஆண்டு எது? = 14.04.1891

169) அம்பேத்கரின் இயற்பெயர் யாது? = பீமாராவ் ராம்ஜி - 14 வது பிள்ளையாக பிறந்தார்

170) பீமாராவ் ராம்ஜியின் ஆசிரியர் பெயர் யாது? = அம்பேத்கர்

171) அம்பேத்கர் இந்தியாவில் எந்த மாநிலத்தில் பிறந்தார்? = மராட்டிய மாநிலம்

172) அம்பேத்கர் அவர்கள் மராட்டிய மாநிலத்தில் எந்த மாவட்டத்தில் பிறந்தார்? = கொங்கண மாவட்டம்

173) அம்பேத்கர் அவர்கள் கொங்கண மாவட்டத்தில் எந்த இடத்தில் பிறந்தார்? = தபோலி என்னும் அம்பவாடே

174) அம்பேத்கர் அவர்கள் உயர்நிலைப் பள்ளி படிப்பை படித்த இடம் எது? = எல்பின்ஸ்டன் பள்ளி (1908 ஆண்டு)

175) அம்பேத்கர் அவர்கள் இளங்கலைப் பட்டப்படிப்பு படித்த கல்லூரி எது? = எல்பின்ஸ்டன் கல்லூரி (1912 ஆண்டு)

176) அம்பேத்கர் இளங்கலை பட்டப்படிப்பு படிப்பதற்கு பொருளுதவி செய்தவர் யார்? = பரோடா மன்னர்

177) அம்பேத்கர் அவர்கள் முதுகலைப் பட்டப்படிப்பு படித்த பல்கலைக்கழகம் எது? = கொலம்பியா பல்கலைக்கழகம் (1915 ஆண்டு)

178) அம்பேத்கர் எங்கு பொருளாதாரத்தில் ஆய்வுப் பட்டம் பெற்றார்? = இலண்டன்

179) அம்பேத்கர் எந்த ஆண்டு பொருளாதாரதிற்கான ஆய்வுப் பட்டம் பெற்றார்? = 1916

180) அறிவியலில் முதுகலைப் பட்டமும், பாரிஸ்டர் பட்டமும் அம்பேத்கர் பெற்ற இடம் எது? = இலண்டன்

181) அம்பேத்கர் எந்த ஆண்டு மகாத்துக் குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டத்தை நடத்தினார்? = 20.03.1927

182) மகாத்துக் குளம் அமைந்துள்ள இந்திய மாநிலம் எது? = மராட்டிய மாநிலம்

183) கேரளாவில் வைக்கம் போராட்டம் நடைபெற்ற ஆண்டு எது? = 1924

184) எந்த ஆண்டு முதம் வட்டமேசை மாநாடு நடைபெற்றது? = 1930

185) ‘அரை வயிற்றுக் கஞ்சிக்கு அல்லல் படும் ஊமைகளின் உறுப்பினர்’ - என வட்டமேசை மாநாட்டில் தன்னைக் கூறிக் கொண்டு பேசத் தொடங்கியவர் யார்? = அன்னல் அம்பேத்கர்

186) அம்பேத்கர் எந்த ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தை தோற்றுவித்தார்? = 1946

187) ஓர் இலட்சிய சமூகம் எதை அடிப்படையாக கொண்டது என்று அம்பேத்கர் கூறுகிறார்? = சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை

188) இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் வகுக்க எத்தனை பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது? = 7 பேர் கொண்ட குழு

189) உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத்தனம் என்றவர் யார்? = அம்பேத்கர்

190) எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும் என்று ஜனநாயகத்திற்கு விளக்கம் கூறியவர் யார்? = அம்பேத்கர்

191) மும்பையில் சிறிது காலம் அம்பேத்கர் ஆற்றிய பணி யாது? = பொருளாதார பேராசிரியர்

192) எந்த ஆண்டு அம்பேத்கர் மும்பையில் சிறிது காலம் பொருளாதார பேராசிரியராக பணியாற்றினார்? = 1918

193) ‘கல்வி அறிவின்றி நாடு முன்னேற முடியாது’ - என்று கூறியவர் யார்? = அம்பேத்கர்

194) ஒரு நாளில் 18 மணி நேரத்தை கல்வி கற்பதற்காகவே செலவழித்தவர் யார்? = அம்பேத்கர்

195) தன்னாட்சித் தகுதியை இந்தியாவிற்கு வழங்க வேண்டும் என முன்மொழிந்தவர் யார்? = அன்னல் அம்பேத்கர்

196) ‘இங்கிலாந்து சொல்வதற்கெலாம் இந்தியா தலையசைக்கும் என்பது தவறு; அந்த நிலை மாறிவிட்டது; இந்திய மக்களின் எண்ணங்களை நீங்கள் ஈடேற்ற வேண்டும்’ - என்று ஆங்கிலேயரிடம் அச்சமின்றி ஆணித்தரமாகக் கூறியவர் யார்? = அம்பேத்கர்

197) அறியாமைதான் அனைத்திற்கும் மூலகாரணம் - என்று உணர்ந்த தலைவர் யார்? = அம்பேத்கர்

198) செல்வமும், உழைப்பும் இல்லாத கல்வி___போன்றது என்று அம்பேத்கர் கூறுகிறார்? = களர் நிலம் போன்றது

199) ‘சமூகத்தின் மாற்றத்திற்கு சிந்தனை விதைகளை தூவுகின்ற புரட்சியாளர்களாலேயே இந்த வையகம் வாழ்கிறது’ - என்று கூறியவர் யார்? = அம்பேத்கர்

200) சமத்துவத்தின் மறுபெயரே மனிதநேயம்; எங்கே சமத்துவம் மறுக்கப்படுகின்றதோ, அங்கே மனிதப் பண்பு மறைந்துவிடுவதை அவர் அனைவருக்கும் உணர்த்தியவர் யார்? = அம்பேத்கர்

201) ‘பகுத்தறிவு துறையில் அவருக்கு இணை அவரே; ஆசிய கண்டத்திலேயே மிகப்பெரிய தனியாள் நூலகம் அமைத்த பெருமை அம்பேத்கரையே சேரும்’ - என்று அம்பேத்கரை பாராட்டியவர் யார்? = ஜவர்ஹர்லால் நேரு

202) அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர்; பகுத்தறிவுச் செம்மல்; ஆராய்ச்சியின் சிகரம்; மக்களின் பெரும் வழிகாட்டி; அப்பெருந்தலைவரைப் போல வேறு யாரையும் நாம் காண முடியாது’ - என்று அம்பேத்கரை புகழ்ந்தவர் யார்? = பெரியார்

203) ‘அம்பேத்கர் தன்னலமற்றவர்; தன்னந்தனியாக செயல்பட்டவர்; தமக்கு கொடுக்கப்பட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்தவர்’ - என்று அம்பேத்கரை புகழ்ந்தவர் யார்? = ராஜேந்திர பிரசாத்

204) இந்திய நாட்டின் சாதி என்னும் இருளை அகற்ற வந்த அறிவுக்கதிர் யார்? = அம்பேத்கர்

205) அம்பேத்கர் இறந்த ஆண்டு எது? = 6.12.1956

206) அம்பேத்கர் அவர்கள் பாரத ரத்னா விருது பெற்ற ஆண்டு எது? = 1990

207) 'சமுதாயமெனும் மரத்தின் வேரைச் சாதிப் புழுக்கள் அரித்துவிடாமல் தடுத்த நச்சுக்கொல்லி மருந்து அவர்' - என்று புகழப்பட்டவர் யார்? = அம்பேத்கர்

208) தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டுவந்த ஆண்டு எது? = 2005 - பிரிவு 6

209) சட்டம் என்பதன் பொருள் யாது? = செம்மை

210) செம்மை என்ற சொல்லிற்கு இலக்கியங்கள் கையாளும் பொருள் யாது? = நடுவுநிலைமை

211) நம் நாட்டின் முதன்மையான வாழ்வியல் அடிப்படைச் சட்டம் - எனப்படுவது எது? = அரசியல் அமைப்புச் சட்டம்

212) அனைத்து வகைச் சட்டங்களுக்கும் அடிப்படையான சட்டம் - எனக் கூறப்படும் சட்டம் எது? = அரசியல் அமைப்புச் சட்டம்

213) மாநிலச் சட்டங்கள் சிலவற்றைக் கூறுக? = வேளாண்மை கடன் நிவாரணச் சட்டம், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், உள்ளாட்சித் துறைச் சட்டம்

214) அரசியல் சாசனத்தினத்தின் எத்தனையாவது பிரிவின்படி குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் முழுமையான பேச்சுரிமை, எழுத்துரிமை உண்டு? = அரசியல் சாசனம் 19(1) - ன் படி

215) சட்டக்குறிப்புகள் சிலவற்றைக் கூறுக :

| | |
|---|---|
| International Law | சர்வதேச சட்டம் |
| Constitutional Law | அரசியில் அமைப்புச் சட்டம் |
| Writs | சட்ட ஆவணங்கள் |
| Substantive Laws | உரிமைச் சட்டங்கள் |
| Procedureal Laws | செயற்பாட்டு முறைச்சட்டங்கள் |
| Indian penal code | இந்தியச் தண்டனைச் சட்டத் தொகுப்பு |
| Criminal Procedure code | குற்றவியல் செயற்பாட்டுமுறைத் தொகுப்பு |
| Civil Procedure code | உரிமையியல் செயற்பாட்டுமுறைத் தொகுப்பு |
| Indian Evidence Act | இந்தியச் சான்று சட்டம் |
| Transfer of Property Act | சொத்துமாற்றுச் சட்டம் |
| Indian Succesion Act | இந்திய வாரிசுரிமைச் சட்டம் |
| Court fee stamp | நீதிமன்றக் கட்டண வில்லை |

216) 'அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்' - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = நற்றிணை

217) ‘ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்’ - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = திருக்குறள்

218) ‘அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்’ - என்ற வரியை எழுதிய ஆசிரியர் யார்? = மிளைகிழான் நல்வேட்டனார்

219) மிளைகிழான் நல்வேட்டனார் எழுதிய மொத்த பாடல்கள் யாது? = நற்றிணையில் - 4 பாடல்களும்; குறுந்தொகையில் - 1 பாடல்; மொத்தம் 5 பாடல்கள் எழுதியுள்ளார்

220) எட்டுத்தொகை நூல்களில் முதல்வதாக வைத்து எண்ணப்படும் நூல் எது? = நற்றிணை

221) ஓரறிவு உயிரிகளையும் விரும்பும் உயரிய பண்பு, விருந்தோம்பல், அறவழியில் பொருளீட்டல் முதலிய தமிழர்தம் உயர் பண்புகளைத் தெள்ளத்தெளிவாக எடுத்தியம்பும் நூல் எது? = நற்றிணை

222) நற்றிணை எனும் எட்டுத்தொகை நூலில் இடம்பெற்றுள்ள அடி வகை யாது? = 9 அடி சிற்றலை மற்றும் 12 அடி பேரலை கொண்டது

223) நற்றிணைப் பாடல்களை தொகுப்பித்தவர் யார்? = பன்னாடு தந்த மாறன் வழுதி

224) நற்றிணை நூல் மொத்தம் எத்தனை பாடல்களைக் கொண்டது? = 400 பாடல்கள்

225) ‘அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்’ - என்ற வரிப் பாடல் நற்றிணையில் எத்தனையாவது பாடலாக இடம்பெற்றுள்ளது? = 210 வது பாடல்

226) ‘சான்றோர் பாலர் ஆப சாலார் சாலார் பாலார் ஆகுபவே’ - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் யாது? = புறநானூறு

227) ‘சான்றோர் பாலர் ஆப’ - என்ற வரியை பாடிய ஆசிரியர் யார்? = கண்ணகனார்

228) கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவராக இருந்தவர் யார்? = கண்ணகனார்

229) கோப்பெருஞ்சோழம் இறக்கும் போது பாடப்பட்ட பாடலின் முதல் வரி எது? = பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய

230) ‘பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய’ - என்ற வரிப் பாடல் புறநானூற்றில் எத்தனையாவது பாடலாக இடம்பெற்றுள்ளது? = 218 வது பாடல்

231) மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்தவர்களின் பெயர்கள் சிலவற்றைக் கூறுக? = திரு.வி.க, பேறறிஞர் அண்ணா, ரா.பி.சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடி அடிகளார்

232) மேடைப்பேச்சின் முக்கூறுகள் என்று கூறப்படுபவை எது? = எடுத்தல், தொடுத்தல், முடித்தல்

233) மேடைப்பேச்சுக்கு உயிர்நாடி எது? = கருத்து

234) நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை எது? = பேச்சுக்கலை

235) தமிழர் திருநாள் தை முதல் நாளாம் அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள் - என்று கூறியவர் யார்? = முடியரசன்

236) 'புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவிப்' - என்ற வரியைக் கூறியவர் யார்? = அண்ணா

237) உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு!! முயற்சி செய்து பெறு!!! - என்ற வரியைக் கூறியவர் யார்? = அண்ணா

238) சேக்கிழாரின் இயற்பெயர் யாது? = அருண்மொழித் தேவர்

239) திருத்தொண்டர் புராணம் யாருடைய வரலாற்றைக் கூறுகிறது? = 63 தனியாடியார்கள் + 9 தொகையடியார்கள் = ஆக 72 சிவனடியார்களை பற்றி கூறுகிறது

240) பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ - என்று சேக்கிழாரை புகழந்து பாடியவர் யார்? = மீனாட்சி சுந்தரனார்

241) பெரியபுராணம் எந்த மூன்றையும் ஒருங்கே காட்டுகிறது? = உலகம், உயிர், கடவுள்

242) உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான் பெரியபுராணாம் - என்று கூறியவர் யார்? = திரு.வி.க

243) தன் வீட்டில் உள்ள அனைத்து பொருட்களுக்கும் திருநாவுக்கரசர் என்று பெயரிட்டவர் யார்? = அப்பூதியடிகள்

244) அப்பூதியடிகள் பிறந்த ஊர் எது? = திங்களூர்

245) பாம்பு தீண்டிய பிள்ளையை உயிர் பிழைக்க வைக்க அப்பர் பாடிய பதிகம் எது? = ஒன்றுகெலாம் எனும் பதிகம்

246) அப்பூதியடிகளின் எந்த மகனை பாம்பு தீண்டிற்று? = முதல் திருநாவுக்கரசரை

247) சேக்கிழார் எந்த சோழ மன்னனின் தலைமை அமைச்சராக இருந்தார்? = அநபாயச் சோழன்

248) உத்தமசோழப் பல்லவர் என்ற பட்டம் பெற்றவர் யார்? = சேக்கிழார்

249) சேக்கிழாரின் காலம் எது? = 12 ஆம் நூற்றாண்டு

250) சொற்கோவிலும், கற்கோவிலும் எழுப்பிய புலவர் யார்? = சேக்கிழார்

251) சேக்கிழார் பிறந்த ஊர் எது? = குன்றத்தூர்

252) பெரியபுராணம் எழுத தில்லை நடராசன் பெருமான் அடியெடுத்து தந்த வரி எது? = உலகெலாம்

253) பொங்குகடல் கடல் கல்மிதப்பிற் போந்தேறியவர் - என்ற வரியில் கூறப்பட்டவர் யார்? = திருநாவுக்கரசர்

254) சூலை நோயால் ஆட்கொள்ளப்பட்டவர் யார்? = திருநாவுக்கரசர்

255) ஒளிப்படம் எடுக்கும் முறையை கண்டுபிடித்த ஆண்டு எது? = 1830

256) ஓடும் குதிரையை இயக்கபடமாக முதலில் எடுத்தவர் யார்? = எட்வர்டு மைபிரிட்சன்

257) படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்? = ஈஸ்ட்மன்

258) ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவியைக் கண்டுபிடித்தவர் யார்? = எடிசன்

259) இயக்கப் படத்தைப் பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்தவர் யார்? = பிரான்சிஸ் சென்கின்சு (அமெரிக்கா நாட்டைச் சேர்ந்தவர்)

260) இயக்கப் படத்தைப் பலரும் பார்க்கும் வகையில் பிரான்சிஸ் சென்கின்சு வடிவமைத்த ஆண்டு எது? = கி.பி.1894

261) இயக்கப் படத்தைப் பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்து பிரான்சிஸ் சென்கின்சு வெளியிட்ட இடம் எது? = ரிச்மண்ட்

262) படப்பிடிப்பு கருவியில் ஓரடியில் நீளமுள்ள படச்சுருளில் எத்தனை படங்களை எடுக்கலாம்? = 16 படங்கள்

263) திரைப்படச்சுருள் செய்யப்படும் பொருள் யாது? = செல்லுலாய்டு

264) கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் யார்? = வால்ட்டிஸ்னி

265) கல்லாருக்கும் கற்றாருக்கும் களிப்பருளும் களிப்பு எது? = திரைப்படம்

266) எம்.ஜி.ராமச்சந்திரன் பிறந்த ஆண்டு எது? = 17.01.1917

267) எம்.ஜி.ராமச்சந்திரன் பிறந்த ஊர் எது? = கண்டி (இலங்கை)

268) எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் புதிய கட்சி துவங்கிய ஆண்டு எது? = 1972

269) எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் மாநிலச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு எது? = 1963

270) எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் பரங்கிமலை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு எது? = 1967

271) எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் தமிழக முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு எது? = 1977

272) எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் எந்த ஆண்டு பாரத ரத்னா விருது பெற்றார்? = 1988

273) ‘கடின உழைப்பே ஒரு நாட்டுக்கு வளர்ச்சியைக் கொடுக்கும்’ - என்று நம்பிய தலைவர் யார்? = எம்.ஜி.ஆர்

274) தமிழகத்தில் சிறந்த நடிகருக்கான பாரத் பட்டம் பெற்றவர் யார்? = எம்.ஜி.ராமச்சந்திரன்

275) போலிப்புலவர்கள் கூட்டம் பெருகாமல் இருக்க தலையில் குட்டிய புலவர் யார்? = அதிவீரராம பாண்டியர்

276) போலிப்புலவர்கள் கூட்டம் பெருகாமல் இருக்க செவியை அறுத்த புலவர் யார்? = வில்லிபுத்தூரான்

277) போலிப்புலவர்கள் கூட்டம் பெருகாமல் இருக்க தலையை வெட்டிய புலவர் யார்? = ஒட்டக்கூத்தர்

278) நாற்கரணம் எனப்படுபவை யாது? = மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

279) நெறிநாலு எனப்படுபவை எது? = வைதருப்பம் (ஆசுகவி), கௌடம் (மதுரகவி), பாஞ்சாலம் (சித்திரக்கவி), மாகதம் (வித்தாரக்கவி), ஆகியவை

280) நாற்பொருள் எனப்படுபவை எது? = அறம், பொருள், இன்பம், வீடு

தூது இலக்கியம் எந்த வெண்பாக்களால் பாடப்படுகிறது? = கலிவெண்பாவால்

281) ‘பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள’ - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் யாது? = சிலப்பதிகாரம்

282) திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் - எனத் தமிழின் பழஞ்சிறப்பினைப் பாடியவர் யார்? = புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

283) தமிழ்கெழுகூடல் - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = புறநானூறு

284) தமிழ்வேலி - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = பரிபாடல்

285) கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழன் என்ற வரி - இடம்பெற்றுள்ள நூல் எது? = மணிவாசகம்

286) நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = பட்டினப்பாலை

287) நரம்பின் மறை - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = தொல்காப்பியம்

288) இசைமரபுகள் வெளிப்படுத்தும் நூல்கள் சிலவற்றைக் கூறுக? = தொல்காபியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம்

289) மனித நாகரிகத் தொட்டில் என அழைக்கப்படும் நாடு எது? = இலெமூரியா கண்டம்

290) பண்ணோடு தமிழொப்பாய் - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = தேவாரம்

291) 'தமிழ்ச்சங்கம் இருந்தது என்ற மரபுச் செய்தி இடைவிடாது இருந்து வருகிறது. இந்தியாவில் இத்தகைய மரபுச்செய்தி வேறெங்குமில்லை' - என்று கூறியவர் யார்? = தனிநாயகம் அடிகள்

292) பெண்களின் பெருவீரத்தைப் பாடுபவர் யார்? = ஒக்கூர் மசாத்தியார்

293) மன்னன் நன்னனைப் பற்றியும், பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் நூலையும் குறிக்கும் கல்வெட்டு எது? = திருவண்ணாமலையில் கி.பி.13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற கல்வெட்டு

294) பூம்புகார் அருகில் உள்ள கீழார்வெளி கடல் அகழ்வாய்வு நடந்த ஆண்டு எது? = 1963

295) அகழ்வாராய்ச்சின் போது முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்ட எது? = ஆதிச்சநல்லூர்

296) ஆதிச்சநல்லூரில் எந்த ஆண்டுகளில் முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டது? = 1876, 2003

297) தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு ஆகிய உலோகங்களால் செய்யப்பட்ட காசுகள் கண்டறியப்பட்ட இடங்கள் எது? = தருமபுரி, கரூர், மதுரை

298) காசுகளில் கண்டறியப்பட்ட முத்திரைகள் யாது? = சூரியன், மலைமுகடு, ஆறு, ஸ்வஸ்திகம், கும்பம்

